பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன்

மலர்: 20] சென்னை: ஆனி 31 (14—7—72) வெள்ளி          வெளியூர்: ஆனி 32 (15—7—72) சனி [இதழ்: 26

## இந்தியத் தலைநகரில் வள்ளுவர் சிலை

### வெல்லிங்டன் மருத்துவமனை எதிரில் நிறுவப்படும்

புதுடில்லி, ஜூலை 14—

புதுடில்லி வெல்லிங்டன் மருத்துவ மனைக்கு எதிரிலுள்ள வடக்குச்சாலை முனையில் இருக்கும் மனையில் திருவள்ளுவர் சிலை அமைக்கப்படும்.

தமிழ்நாடு சுற்றுலாத் துறை அமைச்சர் க. இராசாராம் மக்க

(4-ம் பக்கம் பார்க்க)

# விவசாயிகள் கிளர்ச்சி நிறுத்தப்படுகிறது

## கைதானவர்—தண்டனையடைந்தவர் அனைவரும் விடுதலை

### துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர் குடும்பத்துக்கு ஆறுதல் உதவி

### விவசாயிகள் சங்கத் தூதுக்குழு முதல்வரைச் சந்தித்தபின் ஏற்பட்ட உடன்பாடு

சென்னை, ஜூலை 14-

விவசாயிகள் சங்கச் சார்பில் வந்த தூதுக் குழுவை நேற்று மாலை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சந்தித்தார்; அதுபோது நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாக விவசாயிகள் கிளர்ச்சி நிறுத்தப்படும் என்றும் மறியலின்போது கைதானவர்களும் -- தண்டிக்கப்பட்டவர்களும் விடுவிக்கப்படுவார்கள் என்றும், துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர்கள் குடும்பங்கட்கு ஆறுதல் உதவி அளிக்கப்படும் என்றும் முடிவாகியது.

**விவசாயிகள் பிரதிநிதிகளிடம் இரண்டு மணி நேரப் பேச்சுவார்த்தைக்குப்பின் முதல்வர் இத்தகவலைச் செய்தியாளர்களிடம் அறிவித்தார்.**

பேச்சுவார்த்தை தொடர்ந்து ஜூலை 18-ஆம் நாள் மீண்டும் நடைபெறும்.

செய்தியாளர்களிடம் முதலமைச்சர் தெரிவித்ததாவது:—

"விவசாயிகள் சங்கச் சார்பில் அளிக்கப்பட்டிருக்கும் கோரிக்கைகளை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி சுமூகமாகத் தீர்வு காண்பது என்றும், விவசாயிகள் சங்கச் சார்பில் நடத்தப்படுகின்ற கிளர்ச்சியை நிறுத்திவிடுவது என்றும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

"இதுவரையில் இந்தப் போராட்டத்தில் மறியல் செய்து கைது செய்யப்பட்டவர்களும் – தண்டிக்கப்பட்டவர்களும் விடுதலை செய்யப்படுவர்.

ஜூலை 5-ல் நடைபெற்ற அர்த்தாலின்போது உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து ஆறுதல் உதவி நிதி வழங்கப்படும்."

செய்தியாளர்களிடம் முதல்வர் இவ்விவரங்களை அறிவித்தபோது, பேச்சுவார்த்தைகளில் பங்கு கொண்ட விவசாயிகள் சங்கத் தூதுக் குழு உறுப்பினர்களும் உடனிருந்தனர்.

"உதவித் தொகை எவ்வளவு என்று தீர்மானிக்கப்பட்டதா?" என்று ஒரு நிருபர் கேட்டார்.

"ஆறுதல் அளிக்கும் அளவுக்கு ஆறுதல் உதவி நிதி வழங்கப்படும்" என்று முதல்வர் கலைஞர் பதிலளித்தார்.

அரசுச் சார்பில் முதல்வர் கலைஞர், அமைச்சர்கள் பேராசிரியர் க. அன்பழகன், ப. உ. சண்முகம், செ. மாதவன், எஸ். ஜே. சாதிக் பாட்சா, மு. கண்ணப்பன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விவசாயிகள் சங்கச் சார்பில் நாராயணசாமி நாயுடு (அமைப்பாளர்), எம். கலயாணசுந்தரம், என். எஸ். எஸ். மன்ருடியார், கே. ஆர். நல்லசிவம், பி. இராமச்சந்திரன், டாக்டர் எச். வி. ஹாண்டே, பி. வேலுச்சாமி, தஞ்சை இராமமூர்த்தி, ஆர். கிருஷ்ணசாமி கவுண்டர், எச். பி. தாஸ், எம். ஆதிமூலம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அரசாங்கத் தலைமைச் செயலாளர் சபாநாயகம், வருவாய்த்துறை வாரிய உறுப்பினர் மற்றும் சில அதிகாரிகள் உடனிருந்தனர்.

## புதுக்கோட்டைக்கு அருகில் சர்க்கரை ஆலை

### அமையும் வாய்ப்புப் பற்றி அதிகாரி ஆய்வு

அறந்தாங்கி, ஜூலை 14—

புதுக்கோட்டைக்கு அருகே சர்க்கரை ஆலை அமைக்க வாய்ப்பு இருக்கிறதா -- என்று கண்டறிய தமிழ்நாடு சர்க்கரை ஆலைகளின் இயக்குநர் ஏ. என். பத்மநாபன் புதுக்கோட்டைக்குச் சென்றிருந்தார்.

ஆலை அமைக்கப் போதிய இட வசதி இருக்கிறதா -- மற்ற வசதிகளும் இருக்கிறதா என்பதை அவர் நேரில் பார்வையிட்டார்.

அவரிடம், சர்க்கரை ஆலைக்குத் தேவையான கரும்புகளைப் பயிரிட்டுத் தருகிறோம்' என்று 1,000 விவசாயிகள் மனுக் கொடுத்தார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர் க. வீரையாவும் அதிகாரியுடன் இருந்தார்.

## 'முட்டை வாரியம்'

### மைசூர் அமைச்சர் யோசனை

பெங்களூர், ஜூலை 14—

"ஆஸ்திரேலியாவில இயங்குவது போன்று 'முட்டை வாரியம்' ஒன்றை நிறுவ மைசூர் அரசு ஆலோசனை செய்து வருகிறது."

என்று, மைசூர் சட்டமன்றத்தில், கால்நடை வளர்ச்சித்துறை அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

# கல்லூரி மாணவர்கட்குக் கண்டிப்பான அறிவிப்பு

## புதிய மாணவர்களை துன்புறுத்தினல் கடும் நடவடிக்கை

### எல்லாக் கல்லூரிகளுக்கும் சென்னைப் பல்கலைக் கழகம் சுற்றறிக்கை

சென்னை, ஜூலை 14—

கல்லூரிகளில் புதிதாகச் சேரும் மாணவர்களைப் பழைய மாணவர்கள் 'ராக்கிங்' என்னும் பெயரில் துன்புறுத்தினால், அதுபற்றி உடனடியாகப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவிக்கும்படி, கல்லூரி முதல்வர்களைச் சென்னைப் பல்கலைக் கழகம் கோரியிருக்கிறது; 'இத்தகைய மாணவர்கள்மீது பல்கலைக் கழகமே கடும் நடவடிக்கை எடுக்கும்' என்று அது குறிப்பிட்டிருக்கிறது.

கல்லூரி முதல்வர்களுக்கும் பல்கலைக் கழகம் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:—

"கல்லூரிகளில், புதிய மாணவர்களை, ராகிங்' என்னும் பெயரிலே துன்புறுத்துவதும் -- கேலி செய்வதும் -- பல இடர்ப்பாடுகட்கு உட்படுத்துவதும் பற்றிப் புகார்கள் வருகின்றன; இந்தக் கெட்ட பழக்கம், பொறியியல் -- மருத்துவம் -- வேளாண்மை -- கால்நடைக் கல்லூரிகளில் அதிகமாக இருப்பதாகக் கூறப்படுகிறது; குறிப்பாக மேற்படி கல்லூரிகளின் மாணவர் விடுதிகளில இப்பழக்கம் காணப்படுவதாகச் சொல்லப்படுகிறது; எனவே, கல்லூரி முதல்வர்கள் இத்துறையில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கல்லூரி--மாணவர் விடுதி ஆகியவற்றில் மாணவர் போக்கைக் கண்காணிக்க வேண்டும்; 'ராகிங்' செய்ததாகப் பிடிபட்ட மாணவன் பற்றியோ அல்லது 'ராகிங்' செய்ததாகப் புகார் கூறப்பட்ட மாணவர் குறித்தோ பல்கலைக் கழகத்துக்குத் தெரிவிக்க வேண்டும்; அம்மாணவர் எந்தவிதத்தில் 'ராகிங்' செய்தார் என்பதையும் விளக்கமாகக் கூறவேண்டும்.

(2-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன்பேரில் பல்கலைக் கழகம் மேற்படி அம்மாணவர்மீது நடவடிக்கை எடுக்கும்; அந்த மாணவரைக் குறிப்பிட்ட காலத்துக்குக் கல்லூரியிலிருந்து 'சஸ்பெண்டு' செய்துவைப்பதா அல்லது கல்லூரியிலிருந்தே வெளியேற்றிவிடுவதா என்பதைப் பல்கலைக் கழகம்தான் நிச்சயிக்கும்."

"'ராகிங்' பழக்கத்தை மேற்கொள்ள வேண்டாம் -- என்று கல்லூரி முதல்வர்களும், பேராசிரியர்களும் மாணவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்" என்றும் பல்கலைக் கழகம் கோரியிருக்கிறது.

# உ. பி. -- மேற்குவங்கம் -- கேரள மாநிலங்களுக்கு ஆய்வுக் குழு

## அனுப்புவதுபற்றி தி. மு. க. நடவடிக்கை

சென்னை, ஜூலை 14-

"தமிழ்நாட்டில் ஏதோ நடந்துவிட்டது என்று கருதி – மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவை அனுப்ப இந்திரா காங்கிரசுத் தலைமை முடிவு செய்தது.

"இப்படி ஒரு மாநிலத்தின் நிலைமை பற்றி அறியக் குழுவை அனுப்புவது நல்ல முறையாகும்; ஒரு மாநிலத்திற்கும் – மற்ற மாநிலங்களுக்கும் இடையே உறவை வளர்க்க இந்தக் குழுக்கள் உதவும் என்று நம்புகிறேன்; இந்த முயற்சியை வரவேற்கிறேன்.

"இந்திய ஒருமைப்பாட்டைக் காப்பாற்றவும் -- மாநிலங்களுக்கிடையே உள்ள உறவை வளர்க்கவும் இப்படிப்பட்ட குழுக்கள் உதவும் என்று நம்புகிறேன்.

"உத்தரப் பிரதேசத்திலுள்ள அலிகார் பல்கலைக் கழகம் பற்றிய சம்பவங்கள் குறித்து ஆராய அனுப்பப்படும் குழு உறுப்பினர்களின் பெயர்களை முஸ்லீம் லீகுடன் கலந்துபேசி -- தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அறிவிப்பார்; அந்தக் குழுவில் முஸ்லீம் லீக் உறுப்பினர்களும் இருக்கக்கூடும்.

"அதேபோன்று, மேற்கு வங்காளத்தில் பொதுத் தேர்தல் நடத்தப்பட்ட முறைபற்றி ஆராய்வதற்கு ஆய்வுக்குழு ஒன்றை அனுப்பப் போவதாக இடது கம்யூனிஸ்டுத் தலைவர் பி. இராமமூர்த்தி அவர்கள் என்னிடம் தெரிவித்து -- அந்த ஆய்வுக் குழுவில் தி. மு. கழக உறுப்பினர்களையும் சேர்க்குமாறு என்னைக் கேட்டுக் கொண்டார்; அதை எங்கள் கட்சியின் செயற்குழுவும் -- பொதுக் குழுவும் யோசிக்கும்.

"அதேபோல், கேரளத்தில் நிலப்பறி இயக்கத்தையொட்டி 25,000 பேர் கைது செய்யப்பட்ட சூழ்நிலைபற்றி ஆராயத் தமிழ்நாட்டிலிருந்து ஓர் ஆய்வுக்குழு அனுப்பப்படும்."

**--முதலமைச்சர் கலைஞர்**
(செய்தியாளர்களிடம்)

## தமிழகத்திற்கு வந்த வ. கம்யூனிஸ்டுக் குழு தடுக்கப்பட்டதா?

### முதலமைச்சர் மறுப்பு

சென்னை, ஜூலை 14—

தமிழ்நாட்டுக்கு வந்த வலது கம்யூனிஸ்டுக் குழு தடுத்து நிறுத்தப்பட்டதாகக் கூறப்படும் புகாரை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மறுத்தார்; இதுபற்றிச் செய்தியாளர்கள் கேட்ட கேள்வியும் -- முதலமைச்சர் அளித்த பதில்களும் வருமாறு:—

கேள்வி:—"சாத்தூரில் நடந்த துப்பாக்கிச்சூடு பற்றி ஆராய்வதற்காக வந்த வலது கம்யூனிஸ்டு நாடாளுமன்ற உறுப்பினர் குழுவைப் போலீசார் தடுத்து நிறுத்திவிட்டதாக வலது கம்யூனிஸ்டைச் சேர்ந்த அகமது என்பவர் அறிக்கை ஒன்றில் கூறியிருக்கிறாரே?"

பதில்:—"வலது கம்யூனிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் போலீசாரால் தேடப்பட்டு வந்தார்; தலைமறைவாக இருந்தவர் அங்கு வந்தபோது, போலீசார் அவரைக் கைது செய்தார்கள்.

"எங்களோடு வந்திருக்கும் போது, எங்கள் கட்சி உறுப்பினரைக் கைது செய்தது தவறு" என்றுதான் அகமது, தம்முடைய அறிக்கையில் கூறியிருக்கிறார்; அந்த அறிக்கையை நானே நேரில் பார்த்தேன்; அந்த ஆய்வுக் குழுவைத் தடுத்ததாக அந்த அறிக்கையில் கூறப்படவில்லை.

'தடுக்கப்பட்டார்கள்' என்று கூறுவது பொய்யான செய்தியாகும்; அப்படியே தடுப்பது என்று இருந்தால், விமான நிலையத்திலேயே தடுத்திருக்கக் கூடாதா என்ன? ஆகவே, தடுத்ததாகக் கூறுவது தவறு."

# ஒருமைப்பாட்டு உணர்வு இந்திரா காங்கிரசுக்கு இல்லையா?

## வங்காளி இன உணர்வைத் தூண்டிவிட்டுக் கட்சி வளர்க்க முயற்சி

### பிற மாநிலத்தவர்களுக்கு வேலை கொடுப்பதைத் தடுக்கச் சட்டம் வருகிறது

**மேற்கு வங்கத் தொழிலாளர் அமைச்சர் வெளியிடும் 'இனவெறி'**

சென்னை, ஜூலை 14—

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் மொழிக்கும் -- தமிழ்மக்கள் நலனுக்கும் பாடுபடுவதே குறுகிய நோக்கம் என்றும், மாநில சுயாட்சி கேட்பது பிரிவினை வாதம் என்றும் கூறும் இந்திரா காங்கிரசார் மேற்கு வங்கத்தில் நடந்து கொள்ளும் விதம், ஒருமைப்பாட்டு உணர்வுக்கே வெடி வைப்பதாக உள்ளது.

அங்கு வங்காளி இன உணர்வைத் தூண்டிவிட்டுக் கட்சி வளர்க்கும் திருப்பணியில் அவர்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

வங்காளத்தில் வங்காளிகளுக்கே வேலை தரவேண்டும் என்றும், பிற மாநிலத்தவருக்கு வேலை கொடுக்கக்கூடாது என்றும் தனியார் நிறுவனங்களையும் கட்டுப்படுத்தும் சட்டம் ஒன்றை, மேற்கு வங்கத்தில் உள்ள இந்திரா காங்கிரசு ஆட்சி இயற்ற முற்பட்டுள்ளது.

"ரூ. 800 வரையில் மாதச் சம்பளம் உள்ள உத்தியோகங்கள் அனைத்திலும் மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்தவர்களை மட்டுமே நியமிக்க வேண்டும்" என வலியுறுத்தும் மசோதாவை மேற்கு வங்க மாநில இந்திரா காங்கிரசு அரசு உருவாக்கியிருக்கிறது; அடுத்து வரும் சட்டமன்றக் கூட்டத் தொடரின் போது இந்த மசோதா தாக்கல் செய்யப்படக்கூடும்.

சட்டமாக இயற்றப்படவிருக்கும் இந்த மசோதா அரசுத் துறைகளுக்கு மட்டுமன்றித் தனியார் நிறுவனங்களையும் கட்டுப்படுத்தும்.

மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்தவர்கட்கு வேலை வாய்ப்பளிக்காமல் வெளி மாநிலத்தவர்களை வேலையில் அமர்த்தும் தனியார் நிறுவனங்களைக் கடுமையாகத் தண்டிக்கத்தக்க வகையில் இந்தச் சட்டத்தின் விதிகள் அமைந்திருக்கக்கூடும்.

மேற்கு வங்கத்திலுள்ள பல்வேறு தொழில் நிறுவனங்களில் வங்காளிகட்கு மட்டுமே வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் -- போதிய அளவு தகுதி வாய்ந்த நபர்கள் வங்காளி இனத்தில் இல்லாதபோது மட்டுமே வெளியாருக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் -- என்ற உணர்வுக்கு இப்போது மேற்கு வங்க அரசின் ஆதரவு கிடைத்திருக்கிறது.

மேற்கு வங்கத்தில் ஏராளமான மான அளவில் பீகார் மாநிலத்தவர்களும் -- தென்னிந்தியர்களும் பல்லாண்டுகட்கு முன்பே குடியேறித் தலைமுறை தலைமுறையாக அங்கு வாழ்ந்துவருகிறார்கள்.

"வங்காளிகளையும் -- கிழக்கு வங்கத்திலிருந்து அகதிகளாக வந்து மேற்கு வங்கத்தில் குடியேறி உள்ள கிழக்கு வங்காளிகளையும் மட்டுமே மேற்கு வங்க மாநிலத்தவர்களாகக் கொள்ள வேண்டும்" என்ற கருத்து பரவலாக வலியுறுத்தப்பட்டு வருகிறது; மாநில அரசும் இந்தக் கருத்துக்கு இணங்கும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு வருகிறது.

மேற்கு வங்கத்தில் உள்ள தனியார் நிறுவனங்கள் அனைத்தும் தத்தமது அலுவலகங்களில் ஊழியர்களை நியமிக்க மாநில அரசின் வேலைவாய்ப்புத் தேடித் தரும் துறையினரை அணுக வேண்டும் என்றும், அந்தத் துறையினர் அனுப்பிவைக்கும் நபர்களிடமிருந்து தங்களுக்குத் தேவையான ஊழியர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்றும் மேற்கு வங்க அரசு இயற்றவிருக்கும் சட்டத்தில் வலியுறுத்தப்படும்.

இதற்கு மாறாகத் தன்னிச்சையாக ஊழியர்களை அமர்த்திக் கொள்ளும் நிறுவனங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

வேலை தேடித்தரும் நிறுவனத்தினர் வங்காளிகளை மட்டுமே பேட்டிக்கு அனுப்பிவைப்பார்கள்.

மாதச் சம்பளம் ரூ. 800 வரையிலான உத்தியோகங்கள் அனைத்திற்கும் இந்த விதியின்படியே ஆட்கள் நியமிக்கப்பட வேண்டும்.

**"மாநில அரசின் உதவியுடன் மேற்கு வங்கத்தில் பல புதிய தொழிற்சாலைகளைத் தொடங்கியிருக்கின்றனர்; ஆயினும் வெளிமாநிலத்தவருக்கே வேலைவாய்ப்புத் தரப்படுகிறது; வங்காளிகளுக்கு வேலை வாய்ப்புத் தரப்படவில்லை.**

**"மேற்கு வங்கத்தில் இப்போதுள்ள புள்ளிவிவரத்தின்படி 28 இலட்சம் வங்காளிகள் வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள்; இலட்சக்கணக்கில் இவ்வாறு வங்காளிகள் வேலைவாய்ப்பு இல்லாதிருக்கும் போது பிற மாநிலத்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது"**

என்று மேற்கு வங்கத் தொழிலாளர் நல அமைச்சர் கோபால்தாஸ் வெளிப்படையாகத் தமது உணர்வுகளை வெளியிட்டிருக்கிறார்.

**மேற்கு வங்கத்தில் தொழிற்சங்கங்களும் — வணவர் இயக்கங்களும் இன்று பலவாறாக சிதறுண்டு கிடக்கின்றன; இவற்றை ஒன்று சேர்த்து தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர இந்திரா காங்கிரசு அரும்பாடுபட்டு வருகிறது; இதன் பொருட்டு, வங்காளி இன உணர்வைத் தூண்டி அனைவரையும் கவரும் முயற்சியில் இந்திரா காங்கிரசு மேற்கொண்டிருக்கிறது; இந்த முயற்சியின் ஒரு கருத்தாக இந்தப் புதிய சட்டம் நிறைவேற்றப்படவிருப்பதாகக் கூறப்படுகிறது.**

---

# தமிழகத்தில் சூரியகாந்திப் பயிர்

## 80,000 ஹெக்டார் நிலத்தில் பயிரிடப்படும்

சென்னை, ஜூலை 14—

தமிழ்நாட்டில் சூரிய காந்திச் செடிகளைப் பெருவாரியாகப் பயிரிடத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

சூரிய காந்தி எண்ணெயைத் தயாரிக்கும் நோக்கத்துடன் இந்தச் செடிகள் பயிரிடப்படும்.

சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைத் தவிர இதர மாவட்டங்களில் மொத்தம் சுமார் 80,000 ஹெக்டேர் நிலத்தில் சூரிய காந்திச் செடிகள் பயிரிடப்படும்.

1972—73-ம் ஆண்டுவாக்கில், இது ஒரு வர்த்தகப் பயிராகச் சாகுபடி செய்யப்படும்.

கோவில்பட்டியிலுள்ள வட்டார வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திலும், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சில குறிப்பிட்ட நிலங்களிலும், 1970—71-ம் ஆண்டுகளில், சூரியகாந்திச் செடிகள் சோதனை முறையில் பயிரிடப்பட்டன; தமிழ்நாட்டில் இப்பயிர் மிகவும் வெற்றியைத் தரும் என்று இந்தச் சோதனைகளிலிருந்து தெரியவந்தது.

---

# கடலூரில் தொழிற்பேட்டை

## 15 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்படுகிறது

கடலூர், ஜூலை 14—

"கடலூரில் தொழிற்பேட்டை அமைக்கப்படுகிறது; இதற்காக 15 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது"

என்று தென்னாற்காடு மாவட்டக் கலெக்டர் சண்முகசிவமணி தெரிவித்தார்; இதுபற்றிச் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:—

"கடலூரில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்துவருகின்றன; இதற்காக, கோண்டூர் கிராமத்துக்கு அருகில் 15.6 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு தொழில் துறை இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

இந்தத் தொழிற்பேட்டையில் முதலில் 6 தொழிற்கூடங்கள் கட்டப்படும்; இதற்கு ரூ 5,75,000 அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தொழிற்கூடங்களில் தொழில் நடத்த விரும்பும் தொழில் அதிபர்கள், விண்ணப்பங்களைச் சாதாரணத் தாளில் எழுதி, ரூ. 2,000 'செக்யூரிட்டி டெபாசிட்' தொகையுடன் சென்னைத் தொழில் துறை இயக்குநருக்கு அனுப்பவேண்டும்.

இதுவரையில் 4 விண்ணப்பங்கள் 'டெபாசிட்' தொகை இல்லாமல் வந்துள்ளன.

இதுபற்றி மேல் விவரங்கள் வேண்டுவோர், கடலூரில் இருக்கும் துணைத் தொழில் இயக்குநர் அல்லது சென்னையிலுள்ள தொழில் துறை இயக்குநரிடம் பெற்றுக்கொள்ள வேண்டும்."

---

# மேற்கு--கிழக்கு நாடுகளுக்கிடையே புதிய பாதை

## சூயஸ் கால்வாய்க்குப் பதில் தரைவழித் தொடர்பு

புதுடில்லி, ஜூலை 14—

சூயஸ் கால்வாயைத் திறக்காமலேயே மேற்கு நாடுகளுக்கும்— கிழக்கு நாடுகளுக்கும் இடையே சரக்குப் போக்குவரத்து (நன்னம்பிக்கை முனையைச் சுற்றி வராமல்) நேரடியாக நடைபெறுவதற்கு 'நிலப் பாலம்' ஒன்றை அமைக்கும் நவீன திட்டத்தை எகிப்து தயாரித்திருக்கிறது.

எகிப்திய கப்பல் தூதுக்குழு ஒன்று தற்போது இங்கு வந்திருக்கிறது; அந்தத் தூதுக்குழு மேற்சொன்ட திட்டத்தை வெளியிட்டதுடன், இந்தியா அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் கூறியிருக்கிறது.

1967-ல் நடைபெற்ற போருக்குப்பின், சூயஸ்கால்வாய்ப் போக்குவரத்து நிறுத்தப்பட்டது; அதற்குப் பின்பு கப்பல் போக்குவரத்து, நன்னம்பிக்கை முனையைச் சுற்றி நடைபெற்று வருகிறது; இதனால் போக்குவரத்துச் செலவு கூடுகிறது; எகிப்தும் 10 கோடி பவுன் வருமானத்தை இழந்துவிட்டது.

ஆகவே, இப்போது இரண்டு வகைகளிலும், பயனுள்ள முறையில் கீழ்க்காணும் திட்டத்தை எகிப்து வகுத்திருக்கிறது; இந்தத் திட்டத்தின்படி, ஆசியாவிலும்— கிழக்கு ஆப்பிரிக்காவிலுமிருந்து வரும் கப்பல்கள் சூயஸ் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தவுடன் தங்களுடைய சரக்குகளை இறக்கிவிடும்; இந்தச் சரக்குகள், டிரக்குகளிலும் — லாரிகளிலும் ஏற்றப்பட்டு அருகிலுள்ள அலெக்சாண்டிரியா துறைமுகத்துக் கொண்டு செல்லப்படும்; சரக்குகளை ஏற்றி இறக்கவும்—கொண்டு செல்லவும் மொத்தம் 5 நாட்களாகும் என்று திட்டமிடப்படுகிறது; இரண்டு துறைமுகங்களுக்கும் இடையே உள்ள தூரம் 330 கிலோ மீட்டர் -- அதாவது 206 மைல்.

இதேபோன்று ஐரோப்பாவிலிருந்துவரும் கப்பல்கள் அலெக்சாண்டிரியா துறைமுகத்தில் சரக்குகளை இறக்கி, லாரிகள்மூலம் அவைகளைச் சூயஸ் கால்வாய்க்குக் கொண்டுவருவதென்பது திட்டம்; இதனால், போக்குவரத்துக் காலம் பாதியாகக் குறைகிறது; செலவு 10-லிருந்து 15 சதவிகிதம் வரை குறையும் என்று மதிப்பிடப்படுகிறது.

போக்குவரத்தில் ஏற்படும் சேதங்களை அரசாங்கம் ஈடு செய்யும்.

---

# பொறியியல் பட்டதாரிகட்கு வேலை வாய்ப்பு

## நாடாளுமன்றத்தில் சட்டம் வருகிறது

சென்னை, ஜூலை 14—

பொறியியற் பட்டதாரிகளையும்-- 'டிப்ளமா' பெற்றவர்களையும் தொழில் நிறுவனங்களில் 'அப்ரண்டிசு' (பயிற்சி பெறுபவர்) ஆக எடுத்துக்கொண்டு அவர்களுக்கு உதவித் தொகை அளிப்பதற்கு வகை செய்யும் நோக்கத்துடன், அப்ரண்டிசு சட்டத் திருத்த மசோதா, நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும்; இம்மசோதா, இவ்வாண்டு இறுதிக்குள் நாடாளுமன்றத்தில் நிறைவேறிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

1961-ஆம் ஆண்டின் அப்ரண்டிசு சட்டத்திற்குத் திருத்தமாக இந்த மசோதா கொண்டுவரப்படும்; இதன்படி, பொறியியற் பட்டதாரிகளும், டிப்ளமா பெற்றவர்களும் தொழில் நிறுவனங்களில் அப்ரண்டிசுகளாக எடுத்துக் கொள்ளப்பட்டால், அவர்களுக்கான உதவித் தொகையில் 50 சதவிகிதத்தை மத்திய அரசு அளிக்கும்; பாக்கி 50 சதவிகிதத்தை மேற்படி தொழில் நிறுவனங்களின் நிர்வாகிகளே அளிப்பர்.

தமிழ்நாடு--கேரளம்--ஆந்திரம்--மைசூர் ஆகிய நான்கு தென் மாநிலங்களில் வேலையில்லாப் பொறியியற் பட்டதாரிகள் -- டிப்ளமா

(4-ம் பத்தி பார்க்க)

---

# 58 சதவிகித மக்கள் ஒரே அறையில் வசிக்கும் நிலை

## நகரப்பகுதியில் மட்டும் 120 இலட்சம் வீடுகள் உடனடியாகத் தேவை

### எதிர்காலத்தில் நிலையைச் சமாளிப்பது எப்படி-- மத்திய அமைச்சர் குஜ்ரால் தெரிவிக்கும் கவலை

புதுடில்லி ஜூலை 14 —

**'நம் நாட்டில் குடியிருப்பு வசதிப் பற்றாக்குறை நகர்ப்புறங்களில் மட்டுமன்றிக் கிராமப்புறங்களிலும் அதிகரித்து வருகிறது.**

**"குடியிருப்பு வசதிப் பற்றாக்குறையை இப்பொழுதிலிருந்தே அகற்றப் பெருமுயற்சி செய்யாவிடில் -- இந்த நூற்றாண்டின் இறுதியில் நாட்டின் மக்கள் தொகை இரு மடங்காகப் பெருகும் போது -- குடியிருப்பு வசதிப் பற்றாக்குறை நிலைமை மேலும் சிக்கலானதாகிவிடும்.**

**"தற்போதைய நிலவரத்தின்படி ஆண்டுதோறும் இருபது இலட்சம் குடியிருப்புகளாவது புதிதாகக் கட்டப்பட்டால்தான் பிரச்சினையைச் சமாளிக்க முடியும்"**

என்று மத்திய வீட்டு வசதித் துறை துணையமைச்சர் ஐ. கே. குஜ்ரால், வீட்டு வசதி -- நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் ஐந்தாவது மாநாட்டைத் தொடங்கி வைத்தும் பேசுகையில் சுட்டிக்காட்டினர்; 'கடந்த பத்து ஆண்டுகளில் நம் நாட்டில் குடியிருப்பு வசதி நிலைமை பற்றிப் பரிசீலனை செய்தால் இது நன்கு தெரியவரும்' என்று குறிப்பிட்ட அவர், இத்தொடர்பில் மேலும் கூறியதாவது:—

"1961-ஆம் ஆண்டில் (மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் போது திரட்டப்பட்ட விவரங்களின்படி) நம் நாட்டில் 201 இலட்சம் குடியிருப்புகள் இருந்தன; 1971-ஆம் ஆண்டில் இது 236 இலட்சம் குடியிருப்புகளாகவே உயர முடிந்தது; ஆனால் 1961-ஆம் ஆண்டில் குடியிருப்பு வசதிப் பற்றாக்குறை 658 இலட்சமாக இருந்தது; 1971-ஆம் ஆண்டிலே இந்தப் பற்றாக்குறை 867 இலட்சமாக அதிகரித்துள்ளது.

நகர்ப்புறங்களைப் போலவே கிராமப் பகுதிகளிலும் வீட்டு வசதிப் பற்றாக்குறை மிகவும் அதிகரித்துள்ளது.

டில்லி, பம்பாய், கல்கத்தா, சென்னை முதலிய பெருநகரப் பகுதிகளில், மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதியினர், 100 சதுர அடிக்கும் குறைவான இடங்களிலேயே வசிக்க வேண்டியிருக்கிறது.

இன்னும் சொல்லப்போனால், 53 சதவிகிதம் முதல் 58 சதவிகிதம் வரையிலான மக்கள், ஒரே அறையிலேயே குடியிருக்க வேண்டிய நிலைமை இன்னமும் நீடிக்கிறது.

பெருநகரப் பகுதிகளில் இப்போது குடியிருப்பு வசதிப் பற்றாக்குறை 120 இலட்சமாக உள்ளது; இன்னும் 10 ஆண்டுகளில் இது 250 இலட்சமாக உயரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; இந்த நெருக்கடி நிலைமையைச் சமாளிக்கப் பல முனைகளிலும் இணக்கமாக உழைத்தாகவேண்டும்.

நம் நாட்டில் 72 நகரங்களின் வளர்ச்சிக்கான -- விரிவான பெருநகர்த் திட்டங்கள் தீட்டப்பட்டன; ஆனால், அவை வெகு சில நகரங்களில் மட்டுமே செயல்படுத்தப்படுகின்றன; இந்த நிலை மாறவேண்டும்.

வீட்டு வசதி -- நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் -- மாநில வீட்டு வசதி வாரியங்களும் ஒத்துழைத்து, நகரங்களை விரிவுபடுத்துவதிலும், புதிய நகரங்களை அமைப்பதிலும் முனைய வேண்டும்.

வீட்டு வசதி -- நகர்ப்புற வளர்ச்சிக் கழகம், நிதியளிக்கும் நிறுவனமாக மட்டும் செயல்பட்டால் போதாது; திட்டமிட்ட நகர்ப்புற வளர்ச்சி ஏற்படுவதில் அது முக்கியமாகச் செயலாற்ற வேண்டும்.

பூங்காக்கள் -- நூல் நிலையங்கள் -- பள்ளிகள் முதலிய வசதிகளும், போக்குவரத்து நலன்களும் அமைந்த தரமான நகரியங்கள் ஏற்படப் பாடுபட வேண்டும்.

மாநில வீட்டுவசதி வாரியங்களுக்குக் கடன் தரும்போது, இந்த வசதிகளையும் அவை ஏற்படுத்த வேண்டுமென அவற்றை இந்தக் கழகம் வற்புறுத்த வேண்டும்.

---

# மதுரை மாவட்ட தி. மு. க. மாநாடு

## பெண் தொண்டராகப் பணியாற்ற விரும்புவோர் கவனத்திற்கு:

"ஆகஸ்டு 4, 5, 6 ஆகிய நாட்களில் மதுரை மாவட்ட தி. மு. கழக 5-வது மாநாடு மதுரை ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் நடைபெற இருக்கிறது.

"மாநாட்டில் ஆற்றப்படும் கருத்துரைகளைக் கேட்கவும், 'மாநில சுயாட்சி அடைந்தே தீருவோம்' எனும் எழுச்சிக் குரல் எழுப்பி தங்கள் பங்கினைச் செலுத்தவும் தாய்மார்கள் மிகுதியாக வருகை தரவிருக்கிறார்கள்.

"மாநாட்டில் -- மகளிர் பகுதியில் தொண்டாற்றப் பெண் தொண்டர் படை அமையவிருக்கிறது; தோழியர் தேவகி பாண்டியன், பெண் தொண்டர் படைக்குத் தலைவியாக இருந்து செயல்படவிருக்கிறார்.

"பெண் தொண்டர் படையில் சேருப மகளிருக்குக் கருப்பு -- சிவப்பு வண்ணம் புடவை மாநாட்டினரால் வழங்கப்படுகிறது.

"பெண் தொண்டர்களாகப் பதிவு செய்துகொள்ள விரும்புவோர், மங்கம்மாள் சத்திரம் மாநாட்டு அலுவலகத்தில், தோழியர் தேவகி பாண்டியனிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

எஸ். முத்து எம்.எல்.சி.,
வரவேற்புக் குழுத் தலைவர்

### தொண்டர்கள் கவனத்திற்கு:

'மதுரை மாவட்ட தி. மு. கழக மாநாட்டில் அலுவல் தொண்டராகப் பணியாற்ற மதுரை நகர் -- வட்டாரக் கிளைகளின் ஒவ்வொரு வட்டத்தின் சார்பிலும் ஐந்து தொண்டர்கள் விகிதம் பதிவு செய்துகொள்ள மங்கம்மாள் சத்திரம் மாநாட்டு அலுவலகத்தில் தொண்டர் படைத் தலைவர் ஏ. வி. இராசு எம்.சி. அவர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று, மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் எஸ். முத்து எம்.எல்.சி அறிவிக்கிறார்.

---

# கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டோர்

புதுடில்லி, ஜூலை 14—

1971-ம் ஆண்டில் இந்தியாவில் என்புருக்கி நோய், டிப்திரியா, இன்புளுயன்சா, குடல் நோய்கள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கைக் குறைந்திருக்கிறது; 1971-ம் ஆண்டில் இந்த நோய்கள் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதற்கு முந்திய ஆண்டைவிடக் கணிசமாகக் குறைந்திருக்கிறது.

சென்ற ஆண்டில் இந்தியாவில் 2,63,111 பேர் என்புருக்கி நோயினால் (டி.பி.) பாதிக்கப்பட்டனர்.

1970-ம் ஆண்டில் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 3,30,082 ஆகும்.

இந்த ஓராண்டில் என்புருக்கி நோய் காரணமாக மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 5,346 லிருந்து 4,021-ஆகக் குறைந்துவிட்டது.

பரிசீலனை ஆண்டில் 10,697 பேர் டிப்திரியா நோயினால் பீடிக்கப்பட்டார்கள்; இது, சென்ற ஆண்டின் எண்ணிக்கையைவிட 2,665 குறைவாகும்.

இந்நோய் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 879 லிருந்து 420 ஆகக் குறைந்துவிட்டது.

இன்புளுயன்சா நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 527 லிருந்து 77-ஆகக் குறைந்துவிட்டது; 1971-ம் ஆண்டில் இந்த நோயினால் 9,44,332 பேரும், 1970-ம் ஆண்டில் 23,44,921 பேரும் பாதிக்கப்பட்டார்கள்.

குடல் சம்பந்தப்பட்ட தொற்று நோய்களினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2,874-லிருந்து 1949-ஆகக் குறைந்திருக்கிறது; 1971-ம் ஆண்டில் 6,21,687 பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டார்கள்.

பரிசீலனை ஆண்டில் டைபாய்டு காய்ச்சலால் பீடிக்கப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 613 ஆகும்; அதற்கு முந்தைய ஆண்டில் 1,429 பேர் இந்தக் காய்ச்சலால் உயிரிழந்தார்கள்.

1971-ம் ஆண்டில் 4,331 பேருக்கு இளம்பிள்ளை வாதம் ஏற்பட்டது; 1970-ம் ஆண்டில் 7,151 பேர் இந்த நோய்வாய்ப்பட்டார்கள்; இளம்பிள்ளை வாதத்தினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 193 லிருந்து பரிசீலனை ஆண்டில் 97-ஆகக் குறைந்திருக்கிறது.

---

# பாகிஸ்தானுக்கு மீண்டும் இராணுவ உதவியா?

## இந்தியாவுக்கு ஆத்திரமூட்டும் செயல் வேண்டாம்

### அமெரிக்க அதிபருக்கு ஆசிய விவகார நிபுணர் கடும் எச்சரிக்கை

நியூயார்க், ஜூலை 14—

"பாகிஸ்தானுக்கு மீண்டும் இராணுவ உதவியளிக்கத் தலைப்படுவது இப்போது புதிதாகப் பலம் பெற்றுள்ள இந்தியாவுக்கு ஆத்திரமூட்டக்கூடும்"

என்று, ஆசிய விவகாரங்கள் நிபுணரான பேராசிரியர் ஸ்டீபன் பி கோகன், அமெரிக்க அரசை எச்சரித்திருக்கிறார்; அவருடைய கருத்துக்கள், 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:—

"பாகிஸ்தானுக்கும் -- இந்தியாவுக்குமிடையே ஏற்படக்கூடிய ஆயுதப் போட்டியில் மீண்டும் அமெரிக்கா சிக்கிக்கொள்ள வேண்டிய அவசியமே இல்லை.

மற்ற நாடுகள் அப்படிச் செய்ய விரும்பினால் தாராளமாகச் செய்யட்டும் (இது சீனாவைப் பற்றி என்று கருதப்படுகிறது).

இந்தியத் துணைக்கண்டத்தில் அந்நிய நாடுகளின் செல்வாக்கைக் கட்டுப்படுத்தி வைப்பது, இந்தியா -- பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் நலன்களுக்கும் உகந்ததாகும்; இந்த ஆயுதப் போட்டியில் நாம் சிக்கிக் கொள்வது அத்தகைய வெளியார் செல்வாக்கை அதிகமாக்குமே தவிர, குறைக்காது.

பாகிஸ்தானுக்கு மீண்டும் பொருளாதார உதவி அளிப்பதென்று நிக்சன் அரசு முடிவு செய்திருப்பதன் மூலம், ஓசை போடாமல் இராணுவ உதவி அளிப்பதற்கும் வழி கண்டுபிடிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

நட்பு நாடுகளின் சங்கிலிக் கோர்வையில் பாகிஸ்தான் மிகவும் பலமான ஓர் இணைப்புச் சரணை-- என்ற நம்பிக்கையில், இவ்வளவு காலமாக அத்தகைய உதவியளிக்கப்பட்டு வந்தது; ஆனால் இப்போது அது மிகவும் பலவீனமடைந்துவிட்டதென்றும், ஆகவே நமது உதவியைப் பெறத் தகுதியுடையதென்றும் கருதப்படுகிறது. பாகிஸ்தானுக்கு இராணுவ உதவியளிக்கும் அதேசமயத்தில் மனச்சாட்சியைத் திருப்தி செய்துகொள்ளுவதற்காகவும் -- இந்தியர்களைத் திருப்திபடுத்துவதற்காகவும் இந்தியாவுக்கும் பொருளாதார உதவியளிக்க அமெரிக்கா முன்வரும் என்று இப்போதே சொல்லலாம்.

இந்த இராணுவ உதவித் திட்டம் சென்ற காலத்தில் விபரீதமான பலன்களை விளைவித்திருக்கிறது; அதாவது, 'அகண்ட பாகிஸ்தான்' அழிக்கப்பட்டு—இந்திய அரசுடன் நல்லுறவுகளையும் பாழாக்கியிருக்கிறது.

பாகிஸ்தானிடம் நமக்குள்ள அனுதாபம் காரணமாகவோ, அல்லது சோவியத் செல்வாக்கைப் பற்றி பயந்தோ மீண்டும் அத்தகைய கொள்கையைப் பின்பற்றுவது அப்பகுதியில் அமெரிக்க நலன்களை மேலும் பாதிக்கும்.

சிறு அளவில் இராணுவ உதவி அளித்தால்கூட, அதில் ஆழ்ந்த அரசியல் நோக்கம் இருப்பதாகத் தெற்கு ஆசியாவில் கருதப்படுகிறது.

எல்லா நாடுகளுக்கும் இன்னும் தாராளமாகப் பொருளாதார உதவிகளையும் -- வர்த்தக வசதிகளையும் அளிப்பதுதான் இரு சாராரின் நலன்களுக்கும் ஏற்றதாகும்.

பத்தாம் பசலி ஆயுதங்களைக் குறைந்த விலைக்கு சப்ளை செய்வது அந்த நலன்களுக்கு ஏற்றதல்ல; மேலும், அத்தகைய உதவிகளை மீண்டும் அளிப்பது, பாகிஸ்தானில் இராணுவத்துடன் நமக்குள்ள தொடர்புகளைப் புதுப்பித்துக் கொள்வதாகும்; பாகிஸ்தானில் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஓர் அரசு ஏற்படுத்த வேண்டுமென்ற பூட்டோவின் முயற்சிகளுக்கும் இது இடையூறு செய்யும்."

---

# மைசூரில் நிலச் சீர்திருத்தம்

## நடப்புச் சட்டமன்றக் கூட்டத்தில் மசோதா

பெங்களூர், ஜூலை 14—

நிலச் சீர்திருத்தம் பற்றிய விரிவான மசோதா மைசூர் சட்டமன்றத்தில் நடப்புக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்படும்.

இத்தகவலை வருவாய்த் துறை அமைச்சர், வருவாய்த் துறைக்கான மானியக் கோரிக்கைகள் மீது நடந்த விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

"விவசாயிகட்கு மானியமாக அளிக்கப்பட்ட அரசு நிலங்களை விற்பதற்குத் தடை விதிக்கவும் இந்த மசோதா வகை செய்யும்" என்று அவர் பெரிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கட்கு வழங்க மைசூர் மாநிலத்தில் மொத்தம் 12 இலட்சம் ஏக்கர் அரசு நிலம் ஒதுக்கப்பட்டது; இவற்றில் 1,39,000 ஏக்கர் நிலம், கடந்த 5 ஆண்டுகளில் வழங்கப்பட்டது; எஞ்சிய நிலங்கள் அடுத்த ஆண்டு மார்ச் திங்களுக்குள் வழங்கப்படும்; இவற்றில் 50 சதவிகித நிலம், மலைசாதியினருக்கும் -- தாழ்த்தப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் ஒதுக்கப்படும்.

இந்த விநியோகத்தை விரைவுபடுத்துவதற்கு, மாநிலத்தில் உள்ள 9 மாவட்டங்களில் கூடுதலாக உதவிக் கமிஷனர்கள் நியமிக்கப்படுகின்றனர்."

---

(5-ம் பத்தித் தொடர்ச்சி)

தாரர்கள் ஆகியோருக்கு வேலை வாய்ப்பு அளிக்கத் துணைபுரிவதற்காக மத்தியத் திட்டக் குழுவின் சிபாரிசுகளின்மீது மத்திய அரசு ரூ. 15 இலட்சம் செலவிலான ஒரு தனித் திட்டத்திற்கும் அங்கீகாரம் அளித்துள்ளது.

---

# சென்னைத் திருவள்ளுவர் தமிழ்க்கல்லூரி

நக்கீரர் கழகச் சார்பில் நடைபெறும் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரியில், 1—7—72 ல் 28-ஆம் ஆண்டு தமிழ் வகுப்புக்கள் தொடக்க விழா, சென்னைப் பழைய சாரத் தெரு ஏ. ஆர். சி. மகளிர் பள்ளியில் நடைபெற்றது.

புலவர் நா. இராசகோபாலன் தலைமை வகித்து வகுப்புக்களைத் தொடங்கிவைத்தார்.

இவ்வாண்டு புலவர் பட்டம்பெற்றுத் தேர்ந்த டாக்டர் தெய்வநாயகி ஜோதி வாழ்த்துரை வழங்கினர்.

கல்லூரி இயக்குநர் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி செய்யும் இலவசத் தமிழ்த் தொண்டை விளக்கி, 20-க்கும் மேற்பட்ட தமிழ்ப் பேராசிரியர்கள் ஆற்றும் அருந் தொண்டினைப் புகழ்ந்துரைத்தார்.

திரு. சங்கரமணி நன்றி கூறினர்.

---

# சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு --- நலிவினமான பகுதியினருக்குச் சமூக நீதி

புதுடில்லி, ஜூலை 12—

சிறுபான்மையினருக்கும் -- சமூகத்தின் பலவீனமான பகுதியினருக்கும் நியாயம் வழங்குவதற்கான தலைமையமைச்சரின் கட்டளையைச் செயல்படுத்த எல்லா மாநிலங்களிலும் நிர்வாக இயந்திரம் முடுக்கி விடப்பட்டுள்ளது.

இப்பிரச்சினைகளில் எச்சரிக்கையாக இருக்க நிர்வாகத்துக்கு உதவ தனிப் பிரிவுகளைப் பல மாநிலங்கள் அமைத்திருப்பதாக இந்த தகவல் கிடைத்துள்ளது.

வகுப்புக் கலவரம் மூளாமல் தடுக்க நிர்வாகம் எச்சரிக்கையாகியுள்ளது; அரிசனங்கள் -- மலைசாதியினர் போன்ற பலவீனப் பிரிவினர்களிடம் தன் புதிய பொறுப்புக்களை நிர்வாகம் உணர்ந்துள்ளது.

மதச் சார்பின்மை -- பலவீனப் பிரிவினருக்குச் சமூக நீதி ஆகிய இரு கொள்கைகளையும் அதிகாரிகளிடம் மத்திய உள்துறைச் செயலாளர் கோவிந்தநாராயண் வலியுறுத்தினர்.

சிறுபான்மை மொழியினருக்குப் பாதுகாப்புகளைச் செயல்படுத்தும் விவரங்களையும் மாநில அதிகாரிகளுடன் மத்திய அமைச்சர் விவாதித்தார்; தங்கள் குழந்தைகளின் துவக்கப் பள்ளி -- உயர்நிலைப் பள்ளி கல்விக்கு முன்கூட்டியே இந்தச் சிறுபான்மையினர் பதிவு செய்துகொள்ள வேண்டும் என இப்பொழுது ஒப்பு கொள்ளப்பட்டிருக்கிறது; தங்கள் தாய் மொழியில் கற்க அவர்களுக்கு வசதி அளிக்கப்படவேண்டும்.

துவக்கப் பள்ளியில் 40 மாணவர்கள் சிறுபான்மை மொழியினராக இருந்தால், அவர்கள் தாய் மொழியில் கற்க வசதி அளிக்கப்பட வேண்டும்; உயர்நிலைப் பள்ளி வகுப்பில் அத்தகைய மாணவர் 15 பேர் இருந்தால் அவர்கள் விரும்பும் மொழியில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும்.

---

# லோட்டஸ் ஆப்செட் அச்சகத் திறப்பு

## முதலமைச்சர் கலைஞர் --- அமைச்சர்கள் க. இராசாராம் -- செ. மாதவன் பங்கேற்பு

சென்னை—இராயபுரம், சூரிய நாராயண செட்டி தெருவில், 10-7-72-ல், லோட்டஸ் ஆப்செட் அச்சுக்கூடத் திறப்பு விழா நடைபெற்றது.

விழாவில் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு அச்சுப் பொறியை இயக்கிவைத்தார்.

விழாவுக்குத் தொழில் அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் தலைமைதாங்கினர்.

சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. க. இராசாராம் அவர்கள், தொழிற்கூடக் கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

விழாவுக்கு வருகைதந்தோரை வரவேற்று திருவாளர்கள் லோட்டஸ் பி. இராமசாமி, மு. வேதாசலம் எம்.எல்.ஏ., சி. வி. இராசகோபால் எம்.எல்.சி. ஆகியோர் உரையாற்றினர்.

'நியூ பிளாநெடா டூ கலர் ஆப்செட் மெஷின்' எனப்படும் அச்சு இயந்திரத்தின் விசையை இயக்கிவைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உரையாற்றுகையில், தமிழகத்தில் இப்படிப்பட்ட சிறு தொழில்கள் துவக்குவதற்கு அரசு செய்து தரும் உதவிகளையும், தொழில் துவக்க இடமும் -- கடன் வசதியும் அளிக்க விரைந்து செயல்படுவதையும், ஆனால் இப்படிப்பட்ட முன்னேற்றத் திட்டங்கட்கு இடையூறாக இருக்கும் மத்திய அரசின் அதிகாரத் தலையீடுகள் பற்றியும் குறிப்பிட்டார்.

தமிழகத்தின் சிறு தொழில் வளர்ச்சி — 1067-ம் ஆண்டில் 11 ஆயிரமாக இருந்தது இன்றைய கணக்குப்படி 23 ஆயிரமாக— அதாவது இருமடங்கு அதிகரித்திருப்பதையும் சுட்டிக்காட்டினர்.

சுற்றுலாத் துறை அமைச்சர் க. இராசாராம் அவர்கள் உரையாற்றுகையில், தொழில்கள் துவக்குவதைப் பொறுத்த வரையில், நாடார் சமுதாயம் புறக்கணிக்கப்படுவதாகப் பொதுவான கருத்து நிலவிவருவதை மறுத்துரைத்து -- அதற்கு விளக்கமும் அளிக்கும் வகையில், இப்படிப்பட்ட 'ஆப்செட்' இயந்திரத் தொழில் நடத்துவது நாடார் சமுதாயம்தான் என்றும், இந்தியாவிலேயே இப்படிப்பட்ட இயந்திரம் அமைத்துத் தொழில் நடத்துவது இரண்டு இடங்கள்தான் முதன்மை வகிக்கிறது என்றும் ஒன்று—சிவகாசி மற்றொன்று நாகபுரி என்றும் குறிப்பிட்டதுடன், 'சிவகாசியில் இந்தத் தொழிலை நடத்துபவர்கள் நாடார் சமுதாயத்தினர்தான்' என்றும் எடுத்துரைத்த கருத்துக்கு முதலமைச்சர் நகைச்சுவையாகப் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"சுற்றுலாத் துறை அமைச்சர் குறிப்பிட்டது நாடார் சமுதாயம்; அவர்கள் நாடார்கள்; நாடாரை யாரும் நாடார்; நாடுபவர்களைத்தான் எவரும் நாடுவர்; ஆனால், அவர்கள்தான் நாடார்களாயிற்றே" என்றதும் விழாப் பந்தலே நகைப்பில் ஆழ்ந்தது.

கலைஞர் தொடர்ந்து பேசுகையில், "நாடாரையெல்லாம் நாமே நாடிச் சென்று -- தொழில் துவக்க இடமும் தந்து -- பணமும் கடன் தந்து உதவுகிறோம்; அப்படிப்பட்ட உதவியைப் பெற்றுத்தான் நண்பர் இராமசாமி அவர்கள், தன் மகனின் பெயரிலே இந்தத் தொழிற்சாலையைத் துவக்கியிருக்கிறார்; இந்த 'ஆப்செட்' தொழில் 'அப்செட்' ஆகிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று நகைச்சுவையுடன் கூறினர்.

---

# சச்சிதானந்தம் பிள்ளை மறைவு -- இடுகாட்டில் தமிழறிஞர்கள் புகழாரம்

சென்னை, ஜூலை 14—

அறிஞர் ச. சச்சிதானந்தம்பிள்ளை அவர்கள் தமது 85-வது வயதில் 6—7—72 ல் சென்னை -- இராயப்பேட்டையில் உள்ள தமது இல்லத்தில் இயற்கைபெய்தினர்.

7—7—72-ல், சென்னை கிருஷ்ணம்பேட்டை இடுகாட்டில் அவரது உடல் -- சமாதி நிலையில் அடக்கம் செய்யப்பட்டது.

பின்னர், இடுகாட்டில் நடந்த இரங்கற் கூட்டத்தில், சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நெ. து சுந்தரவடிவேலு, மறைந்த தமிழறிஞர் ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களின் கல்வி நெறித் தொண்டினையும் -- தமிழ்த் தொண்டினையும் -- உண்மை உழைப்பினையும் புகழ்ந்துரைத்தார்.

மாநகராட்சி உறுப்பினர்கள் திரு. பார்த்தசாரதி, திரு. அரங்கநாதன், பேராசிரியர் பூ. ஆலாலசுந்தரம் செட்டியார் ஆகியோர் இரங்கலுரை ஆற்றினர்.

மறைந்த ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள், சைவ நெறி சம்பந்தமாகப் பல நூல்கள்--கட்டுரைகள் எழுதியுள்ளார்; சிறந்த பேச்சாளர்; ஒழுக்க நெறியாளர்; மாநகராட்சி கல்வி அதிகாரியாகவும், தமிழக அரசின் துணைக் கல்வி இயக்குநராகவும் பணியாற்றினர். இத்தனைக்கும் மேலாகத் திரு. வி. க. வின் தமிழ்ப் பணிக்குத் துணையாக விளங்கினர்; திரு. வி. க. மணி மண்டபத்தைத் தோற்றுவித்தார்.

நடக்க இருப்பவை

# வன்முறைக் கண்டனப் பொதுக்கூட்டங்கள்: 15--7--72

**மீஞ்சூர்**

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: மு. கேசவன்; பேசுவோர்: சி.வி. இராசகோபால் எம்.எல்.சி., மா. நாகலிங்கம் எம்.எல்.ஏ., ஆ. கிருஷ்ணன், கே.வி. சாமி, ஜி. மணி, திருமாவளவன்.

**கோபி**

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு பெரியார் திடலில்: தலைவர்: டாக்டர் எஸ்.எம். பழனியப்பன் எம்.எல்.ஏ.; பேசுவோர்: கோ. விசுவநாதன் எம்.பி., ஆர். பி. உலகநம்பி எம்.பி., ஜி.என். இராசு எம்.எல்.சி., எஸ்.கே. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., வி.வி. வெங்கடாசல , கே.எஸ். ஆனந்தன், கே.என்.கே. இராமசாமி, முகம்மது ஷபி, ஜி. ஆர். பழனியப்பன், ஜி.பி. வெங்கிடு எம்.சி., பி.கே. பழனியப்பன்.

**கடலூர்**

நகர தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு மஞ்சை நகர் மைதானத்தில்; தலைவர்: கி. கோவிந்தராசன்; பேசுவோர்: அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், ஏ.கே.ஏ. அப்துஸ் சமது எம்.பி., எம். செல்வராசு எம்.எல்.ஏ., பாபு கோவிந்தராசன் எம்.எல்.ஏ., வி. கிருஷ்ணமூர்த்தி எம்.எல்.ஏ., ஆர். சாம்பசிவம் எம்.எல்.சி., என். இராசாங்கம் எம்.எல்.ஏ., ஆர். சுப்பிரமணியம், ஏ.வி. தண்டபாணி, க. சண்முகம். (மாலை 4 மணிக்கு திருப்பாட்புலியூரிலிருந்து ஊர்வலம் புறப்படும்.)

**திருவளஞர்**

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: ஆர். பெருமாள்; எஸ்.எம். துரைராசு எம். எல்.ஏ., து. எதிராசன், பி. செல்வராசன், ந. சந்திரன் எம். சி., எச்.ஏ. கனி, மற்றும் பலர்.

**மணப்பாறை**

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு; பேசுவோர்: கேரளசுந்தரம் எம்.சி., வீ.சா. இளஞ்செழியன் எம்.எல்.ஏ., மா. கந்தசாமி எம்.எல்.ஏ., நா. வெங்கிடுசாமி, அ. ஆண்டியப்பன்,

**துவரங்குறிச்சி**

தி.மு.க. சார்பில் மாலை 5 மணிக்கு; பேசுவோர்: கேரளசுந்தரம் எம்.சி., வீ.சா. இளஞ்செழியன், நா. வெங்கிடுசாமி மற்றும் பலர்.

**திருத்துறைப்பூண்டி**

நகர தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு; பேசுவோர்: ந. தர்மலிங்கம், வை. சுப்பிரமணியம், டி.எஸ். கல்யாணசுந்தரம், கு. வேதையன், மு.க. அமீர்.

**முத்துப்பேட்டை**

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு; பேசுவோர்: மா. பன்னீர்செல்வம், ப. நாகரத்தினம், தோழர் ஆர். சுப்பிரமணியம், கி. இராமாநுசம்.

**விளக்குடி**

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு; பேசுவோர்: கே. வைரக்கண்ணு, கு. சண்முகம், வே. கோதண்டபாணி, நடேசன்.

**சங்கேந்தி**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; பேசுவோர்: இரா நடராசன், கா. வீரையன், முருகையன், அம்புரேஸ்

**தலைஞாயிறு**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; பேசுவோர்: செ. யூசுப், கோ. கல்யாணசுந்தரம், குமரவேல், இரா. இலக்குமணன், ஆர். துரை, இராசா முகம்மது.

**வேதாரண்யம்**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு; பேசுவோர்: மா. மீனாட்சிசுந்தரம் எம்.எல்.ஏ., சு. சாந்தன், மு. க. அன்பரசு, சிவ, கனகசுந்தரம், சி. இராசம்.

**தகட்டூர்**

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கடைத் தெருவில்; பேசுவோர்: ப. முருகு. சோமசுந்தரம், க. சிதம்பரம், வி. பாலகிருட்டினன்.

**சத்திரப்பட்டி**

தி. மு. க. சார்பில் மாலை 7.மணிக்கு நடுத் தெருவில்; தலைவர்: எஸ். சோமசுந்தரம்; பேசுவோர்; டி. கே. கே. சாமி, ம. கருப்பஞானியார், மு. குருசாமி, அ. கலுசலிங்கம், பி. வி. பழனிச்சாமி, இரா. கி. இலட்சுமணன் (பேருந்து நிலையத்திலிருந்து மாலை 6-மணிக்கு ஊர்வலம் புறப்படும்).

**தாயில்பட்டி**

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு ஊராட்சிமன்றத் திடலில்; தலைவர்: எஸ் வி. திருவேங்கடராமானுசம்; பேசுவோர்: மதுரை எம். ஆர். கணேசன், கா. காளிமுத்து எம்.எல்.ஏ., எஸ் பி. மணியம், ஏ. எஸ். கனி, எஸ் கே. சாமி, மா. மவுன்ராசு, க. சுப்பிரமணியம், சி. சண்முகம், கே. பாண்டி (மாலை 3-30 மணிக்குக் கண்டன ஊர்வலம் புறப்படும்).

**வேலூர் (சேலம்)**

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு வ. உ. சி. திடலில்; தலைவர்: ஆர். மணி; பேசுவோர்: திருப்பத்தூர் இராமமூர்த்தி, சி. வே. வேலப்பன் எம்.எல்.ஏ., மு. பழனிவேலன் எம்.எல்.ஏ., மு. சீனிவாசன், டாக்டர் கே. ஆறுமுகம், ஏ. இராசு, கு. இளஞ்செழியன், ம. முஸ்தபா, வி. ஏ. இலக்குமணன், க. சீனிவாசன், க. மகபூப், வை. பெருமாள், டி. கே. இராசு, பழ. மருதை, வி. கே. சுப்பிரமணியன்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அறிஞர் அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்பெற்றது

## வ. ஆ. மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகட்கு:

"வட ஆர்க்காடு மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள் கூட்டம், 16-7-72 காலை 10 30 மணிக்கு திருப்பத்தூர் வட்டம் ஏலகிரி மலை பயணிகள் விடுதியில், சட்டமன்ற உறுப்பினர் திரு. மா. ப. சாரதி தலைமையில் நடைபெறும்; மாவட்டப் பிரதிநிதிகள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்"

என்று மாவட்டச் செயலாளர் தோப்பூர் திருவேங்கடம் அறிவிக்கிறார்.

## தொடக்கப் பள்ளி ஆசிரியர் கழகம்

### மாநில அமைப்புக் கூட்டம்

தொடக்கப் பள்ளி ஆசிரியர் கழக மாநில அமைப்புக் கூட்டம் சென்னை-சூளை மாநகராட்சிப்பள்ளியில் 15—7—72 மாலை 3-மணிக்கு நடைபெறும்; அதுபோது சென்னை மேயர் திருமதி காமாட்சி செயராமன், துணை மேயர் என். வி. என். மேற்படி கழகத் துணைத் தலைவர் மதுரை கருணை எம்.சி., சென்னை மாநகராட்சி மன்றச் செயலாளர் இராசா முகம்மது ஆகியோர் கலந்துகொள்வர்.

## குழுக் கூட்டம்

சென்னை 30-வது வட்ட தி. மு. க. பொது உறுப்பினர்கள் கூட்டம் 16—7—72 காலை 10-மணிக்குப் பெருமாள் கோயில் தோட்டத் தெரு, 46 எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும்; உறுப்பினர்கள் தவறாது வருகை தருமாறு செயலாளர் எம். ஆர். சந்திரன் கேட்டுக்கொள்கிறார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளவை உறுப்பினராக இருந்த போது இந்தச் சிலைக்கான நிதி திரட்டப்பட்டுச் சிலை வழங்கப்பட்டது; இச்சிலையினை நிறுவுவதற்குத் தகுந்த மனையைத் தேர்ந்தெடுக்கும் முயற்சி இதுவரையில் மேற்கொள்ளப்பட்டிருந்தது; இப்போது மத்திய அரசின் பொதுப் பணித் துறை அமைச்சர், மனைக்கான இடத்தைக் குறிப்பிட்டுவிட்டார்.

புதுடில்லிக்குச் சென்றிருந்த அமைச்சர் க. இராசாராம் அவர்கள், அந்த இடத்தைப் பார்வையிட்டார்; டில்லி அதிகாரிகளிடமும் இதுபற்றி ஆலோசனை நடத்தினர்.

வள்ளுவர் சிலை 12 அடி உயரமுள்ளது; சிலைத் திறப்பு விழா செப்டம்பர் திங்களில் நடைபெறும்.

## சென்னையில்

# வன்முறைக் கண்டனப் பொதுக்கூட்டம்

சென்னை மாவட்ட தி.மு.க. சார்பில்

15--7--72 இரவு 7-மணிக்கு

கடற்கரைச் சீரணி அரங்கில்

தலைவர்: ஆர். டி. சீதாபதி

பேசுவோர்:

முதலமைச்சர் கலைஞர்

சிலம்புச் செல்வர் ம. பொ. சி.

திருப்பூர் மொய்தீன் எம்.எல்.ஏ.

பி. கே. மூக்கையா தேவர் எம்.பி.

எஸ். எஸ். இராமசாமி படையாச்சி எம்.எல்.சி.

'விடுதலை' கி. வீரமணி

நீலநாராயணன் எம்.எல்.சி.

# டில்லி யோசிக்கிறது-- நாம் செய்கிறோம்

## ஏழை எளியவர்களுக்கு நல்வாழ்வு அளிப்பதில் முந்திக்கொண்டோம்

## புதுக்கோட்டை மத்திய வங்கிப் பொன்விழாவில் முதலமைச்சர் கலைஞர் விளக்கம்

### அரசுடைமை வங்கிகளின் போக்கிற்குக் கண்டனம்

புதுக்கோட்டை, சூலை 14—

"இந்தியாவில் உள்ள 14 வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன; அப்படித் தேசியமயமான வங்கிகளால், தேய்ந்தவர்கட்கு நிம்மதி தர முடியவில்லை.

"தேசிய மயமாக்கப்படுவதற்கு முன்னால் இருந்த பழையவர்களே அங்கு இருக்கிறார்கள்; அந்த வாடை இன்னும் குறையவில்லை, தமிழ்நாட்டிலும் அரசினுடைய திட்டங்களுக்குத் தடையாகச் சில அதிகாரிகள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

"நான், அவர்களுக்குக் கூறிக்கொள்வதெல்லாம், நீங்கள் -- உங்களைத் திருத்திக்கொள்ளுங்கள்! பழைய வாடை உங்கள் உள்ளத்தில் வீசாமல் பார்த்துக்கொள்ளுங்கள்; ஏழை எளிய மக்களுக்கு 20 ஆண்டுக்காலமாக நன்மை ஏற்படாததால் ஆட்சியை மாற்றினார்கள்; இன்று ஏழை எளிய மக்களின் ஆட்சி நடக்கிறது; ஆகவே, ஏழை எளிய மக்களுக்காகப் பாடுபடும் வழியைப் பின்பற்ற அரசுக்கு உறுதுணையாக இருங்கள்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இங்கு நடைபெற்ற புதுக்கோட்டை மத்திய வங்கியின் பொன்விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

புதுக்கோட்டை மத்திய வங்கி பொன் விழா நேற்று முன்தினம் நடந்தது.

விழாவுக்கு முன்னாள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் தலைமை தாங்கினார்.

விழாவில் கலந்துகொண்ட முதல்வர் கலைஞர் அவர்களிடம் மத்திய வங்கி மற்ற கூட்டுறவுச் சங்கங்கள் சார்பில் ரூ. 35,009 கண் சிகிச்சை நிதிக்குக் கொடுக்கப்பட்டது; அந்தப் பணத்தை, நாடாளுமன்ற உறுப்பினர் வீரையா வழங்கினார்.

பொன் விழா நினைவு மாளிகைக்கு அமைச்சர் செ. மாதவன் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

பொன் விழா நினைவுக் முதலமைச்சர் கலைஞர் திறந்துவைத்து விளக்கேற்றி வைத்தார்.

பொன்விழா மலரைக் கூட்டுறவு அமைச்சர் சி. பா. ஆதித்தனார் வெளியிட்டார்.

ஏறந்த சங்கங்கள் -- அலுவலர்களுக்கு வேளாண்மை அமைச்சர் மன்னை ப. நாராயணசாமி பரிசுகள் வழங்கினார்.

"ஏழை எளிய மக்களின் ஏமாற்றங்களைப் போக்கி -- தன் கொள்கை வழிநின்று திட்டங்களைச் செயலபடுத்துவதில், தி. மு. கழக அரசு வீறுநடை போட்டுவருகிறது என்பதை இந்த நாடு நன்கு அறியும்.

50 ஆண்டுகளுக்குமுன்பு இந்த நிகர இலாபம் ரூ. 200-ஆக இருந்தது; இன்று ரூ. 1 இலட்சத்தைத் தாண்டியுள்ளது.

தமிழ்நாட்டில் பசுமைப் புரட்சியை வெகுவாக உருவாக்க கிராம மக்களுடன் கழக அரசு நெருங்கிய தொடர்பு கொண்டு -- நல்ல பல சாதனைகளைச் செய்துவருகிறது.

கூட்டுறவுத் துறையோடு அரசியல் கலக்கும் சூழ்நிலையும் இன்று ஏற்பட்டுள்ளது; பொதுவாக எந்தத் திட்டத்தை நிறைவேற்றும் முயற்சியிலும் அரசியல் நுழைந்திருக்கிறது; ஆகவே, நியாய -- அநியாயத்தைப் புரியவைக்கச் சற்றுச் சங்கடம் ஏற்படுகிறது.

ஆனாலும், பெரும்பான்மை மக்கள் நியாயத்தின் பக்கம்தான் இருக்கிறார்கள் என்பதால், இந்த விழாவில் அமைச்சரை வரவழைத்துப் பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கள் முன்னிலையில் விழா நடத்துவது ஒன்றே நல்ல உதாரணமாகும்.

கூட்டுறவுச் சங்கங்களில் மிட்டா-மிராசுதார்கள், குட்டிக் குபேரர்கள் இருந்துவந்தார்கள்; அவர்களிடமிருந்து கூட்டுறவுச் சங்கங்களை விடுவித்து, ஏழை-எளிய மக்களிடம் ஒப்படைத்த பெருமை அறிஞர் அண்ணா அவர்களையே சாரும்.

இந்தியாவிலேயே கூட்டுறவுத் துறைகளில தமிழ்நாடுதான் முதலிடம் வகிக்கிறது. சமதர்மத் திட்டங்களுக்காக-- ஏழை எளிய மக்களின் வீட்டுப் படிகட்டுகளை மிதித்துச் சமதர்ம விருட்சத்தை வளர்க்கக் காரணமாக இருந்தவர் அண்ணா அவர்களாவார்; ஆகவே, சமதர்மத்துக்கு வழிகாட்டியாக இருப்பது தமிழ்நாடுதான் என்று திட்டவட்டமாகச் சொல்ல இயலும்.

ஏழை--எளிய மக்கள் நலனுக்காக எந்தெந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று டில்லியில் இப்போதுதான் யோசனைகள் வெளியிடப்படுகின்றன; ஆனால், அந்தத் திட்டங்களெல்லாம் இங்கு செயல்முறையில் நடைபெற்று வருகின்றன.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஆலோசனைக்காக நான் டில்லி சென்றிருந்தபோது, திட்ட முன்னோடி அறிக்கை ஒன்றை என்னிடம் தந்தார்கள்; அந்த அறிக்கையில், 'கிராம மக்களின நலன் அடிப்படையில் எந்த முறையில் திட்டங்கள் தீட்ட வேண்டும்' என்று ஆலோசனை கூறப்பட்டிருந்தது; அதுபற்றி நான் அங்கு பேசும்போது, 'உங்கள் திட்ட முன்னோடி அறிக்கையில் கூறப்பட்டிருப்பதைக் கடந்த 4 ஆண்டுக் காலமாக நாங்கள் நிறைவேற்றி வருகிறோம்' என்று பெருமையோடு சொன்னேன்.

அரசுத் துறையில் உள்ள இயந்திரங்கள், இன்று கிராம மக்களிடையே வேகமாகச் சுழன்று கொண்டு வருகின்றன; அதிலும், குறிப்பாகவும் சிறப்பாகவும் கூட்டுறவு இயந்திரம் மிகவும் வேகமாகச் சுழற்றி விடப்பட்டுள்ளது."

தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

### என். வி. நடராசன் நிகழ்ச்சிகள்

சூலை 15 மாலை: கோவை நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல்.

சூலை 16: இரூர் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல்.